**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

# சுற்றறிக்கை

**தோட்டக்கலை விவசாயிகள் மற்றும் கிராமப்புற மகளிர் கவனத்திற்கு**

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, தோட்டக்கலை பிரிவின் மூலம், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. காய்கறிப் பயிர்களில் புதிய தொழில்நுட்பங்கள் அறிந்து கொள்ளும் நோக்கோடு தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலமாக **"காய்கறிப் பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்"** குறித்த **ஐந்து நாள் பயிற்சி** முகாமினை **பெங்களூருவில்** உள்ள **இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி மையம்** மூலமாக கீழ்கண்ட அட்டவணையின்படி நடைபெற ஆவண செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பிரிவு | நபர்கள் | மாதம் |
|---|---|---|---|
| 1. | கிராமப்புற மகளிர் | 25 | ஜீலை, 2019 |
| 2. | தோட்டக்கலை விவசாயிகள் | 25 | ஆகஸ்ட், 2019 |

இப்பயிற்சி முகாமில் பங்கு பெற விருப்பமுள்ள "கிராமப்புற மகளிர்" மற்றும் "தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள்" சம்பந்தப்பட்ட உழவர் உதவியகம் (அல்லது) வேளாண்துறையின் இணையதளத்தில் பதிவிறக்கம் மூலம் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து **07.06.2019**க்குள் அந்தந்த உழவர் உதவியகத்தில் (அல்லது) தாவரவியல் பூங்காவில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு:** (i) இப்பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் விவசாயிகள் காய்கறி சாகுபடிக்கு பிந்தைய மானியத்தை இவ்வலுவலகம் மூலம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) இப்பயிற்சிக்குண்டான பயிற்சி கட்டணம், உணவு, உறைவிடம், போக்குவரத்து செலவுகள் அனைத்தும் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையைச் சார்ந்தது

**மு. வேதாச்சலம்**
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)**

**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

## "காய்கறிப்பயிர்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள்"
## பயிற்சி விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : |
| 2. | விலாசம் மற்றும் தொலைபேசி எண் | : |
| 3. | விண்ணப்பதாரரின் நிலை | : சிறு/குறு/பெரு விவசாயி |
| 4. | விண்ணப்பதாரரின் பிரிவு | : அட்டவணை/பொது |
| 5. | நிலம் அமைந்திருக்கும் இடம் பற்றிய தகவல் | : வருவாய் கிராமம் - |
| 6. | தாங்கள் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்து சாகுபடிக்குப்பிந்தயமானியத் தொகை பெற்றவர் | : ஆம்/இல்லை |
| 7. | பயிரிடப்படும் தோட்டக்கலை பயிர்களின் விபரம் | : பயிர் -<br>விஸ்தீரணம் - |
| 8. | பயிற்சி முகாமில் பங்கேற்பதற்கான தங்களுடைய விருப்பம் | : ஆம்/இல்லை |
| 9. | கடந்த ஆண்டுகளில் சாகுபடிக்கு பிந்தைய மானியம் பெற்ற விபரம் | : வருடம் -<br>பயிர் -<br>மானியத்தொகை - |

நான் மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மை என்றும், மேற்கண்ட பயிற்சியில் கலந்துகொள்ள முழுமனதுடன் சம்மதிக்கிறேன் என்றும் இதன் மூலம் உறுதி அளிக்கின்றேன்.

விண்ணப்பதாரரின்
கையொப்பம்